## 1.Part II Scheme

**1.20 1996–97 – எஸ்.வி. நகரம் ஊரக விரிவாக்க பயிற்சி நிறுவனத்தின் விடுதிகள் கட்டி முடிப்பதற்கான திருத்திய நிர்வாக அனுமதியும், எஞ்சிய ரூ.2.00 இலட்சத்திற்கு அனுமதியும் வழங்கப்படுகிறது**

---

ஊரக வளர்ச்சி (தி3) துறை

அரசாணை (நிலை) எண்.250 நாள் : 7.12.1999

படிக்க :

1. அரசாணை நிலை எண்.183, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 3.9.96
2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் ஆர்.ஓ.சி. எண்.67315/96/கட்டிடம் 2.2 நாள் 11.10.96
3. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரின் செயல்முறை எண்.201105/96/ஊ.வ./இ2, நாள் 26.2.97
4. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் ஆர்.ஓ.சி. எண்.67315/96/திட்டம் 1, நாள் 31.8.99

**ஆணை**

மேலே படிக்கப்பட்ட அரசாணை ஒன்றில், திருவண்ணாமலை மாவட்டம், எஸ்.வி. நகரத்தில் உள்ள ஊரக விரிவாக்க பயிற்சி மையத்தின் முதல்வருக்கு விடுதிகள் கட்டுவதற்காகும் மொத்த செலவினம் ரூ. 10.00 இலட்சம் என மதிப்பீடு செய்யப்பட்டு அதில் ரூ.8.00 இலட்சத்தினை 1996–97ம் ஆண்டுக்கான பகுதி–2 திட்டத்தின் கீழ் அனுமதித்து ஆணையிடப்பட்டது. அரசால் அனுமதிக்கப்பட்ட தொகையான ரூ.8.00 இலட்சத்தை ஊரக வளர்ச்சி இயக்குநர் பெற்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளித்துள்ளார். மாவட்ட ஆட்சித்தலைவர் மேற்குறிப்பிட்ட தொகையை, கட்டிடம் கட்டுவதற்காக பொதுப்பணித்துறைக்கு அளித்துள்ளார்.

2. வேலூர், வட்டார மேற்பார்வைப் பொறியாளரால், மேற்படி கட்டிடம் கட்டுவதற்கான இறுதி மதிப்பீடு ரூ.10.00 இலட்சம் என கணக்கிடப்பட்டு, ஒப்பந்தப்புள்ளியும் இறுதி செய்யப்பட்டு, கட்டிடமும் கட்டிமுடிக்கப்பட்டு, தற்போது இறுதி கட்டமைப்பு வேலைகள் நடைபெற்று வருவதாக, ஊரக வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. திருவண்ணாமலை மாவட்டம், எஸ்.வி. நகரத்தில் உள்ள ஊரக விரிவாக்க பயிற்சி மையத்தின் முதல்வருக்கான விடுதியினை ரூ. 10.00 இலட்சம் செலவில் கட்டிமுடிப்பதற்கான திருத்திய நிர்வாக அனுமதியும் ஏற்கனவே மேற்படி கட்டிடப்பணிக்காக ரூ.8.00 இலட்சம் வழங்கப்பட்டுவிட்டதால் எஞ்சிய ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு 1999–2000ம் ஆண்டுக்கான திருந்திய மதிப்பீடு மற்றும் இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்குவதை எதிர்நோக்கி வழங்குவதற்கான ஆணையும், மேலும் அரசாணையை எதிர்நோக்கி இப்பணியை ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு கட்டிடப்பணியை செய்து முடித்த வேலூர் வட்டார மேற்பார்வை பொறியாளரின் (Superintending Engineer, Building, C & M Circle, Vellore) செயலுக்கு பின்னேற்பு வழங்குவதற்கான ஆணையும் வெளியிடுமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4, இக்கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, ஊரக வளர்ச்சி இயக்குநரின் கோரிக்கையினை ஏற்று, ஏற்கனவே கட்டப்பணிக்காக ரூ.8.00 இலட்சம் வழங்கப்பட்டு விட்டதால் எஞ்சிய ரூபாய் 2 இலட்சத்தை (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) 1999–2000ம் ஆண்டிற்கான திருந்திய மதிப்பீடு / இறுதியாக மாற்றியமைக்கப்பட்ட மதிப்பீட்டில் (RE/ FMA 1999–2000) நிதி ஒதுக்குவதை எதிர்நோக்கி வழங்க ஆணையிடப்படுகிறது. மேலும் அரசாணையை எதிர்நோக்கி ஏற்கனவே இப்பணியை ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடித்த வேலூர் வட்டார மேற்பார்வை பொறியாளரின் செயலுக்கு பின்னேற்பு வழங்கியும் ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஆணையிடப்பட்ட தொகையை கீழ்க்கண்ட கணக்குத்தலைப்பின் கீழ் வரவு வைக்கவேண்டும்.

> "4515 – 00 Capital Outlay on other Rural Development Programmes – 102 - Community Development Schemes in the Ninth Five Year Plan –II. State Plan – JA Buildings 16. Major works.(D.P.C.No. 4515 00 102 JA 1602)"

6. ஊரக வளர்ச்சி இயக்குநர் மேலே அனுமதிக்கப்பட்ட தொகையினைப் பெற்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவருக்கு வழங்க ஆணையிடப்படுகிறது.

7. இத்தொகையினை 1999–2000ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் சேர்ப்பதற்கு ஏதுவாக தக்க செயற்குறிப்பினை உரிய நேரத்தில் அரசின் (நிதி)(PWD.II)துறைக்கு தலைமைப் பொறியாளர்(பொது) சாலைகளும், பாலங்களும் வழியாக அனுப்புமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இந்த ஆணை நிதித்துறை அ,சா,கு,எண்.84990/RD/99–1,நாள்19.11.99 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசுச் செயலாளர்